# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடியாத்தம்.

முன்னிலை:- **திரு.ஜோ.ஜெய்கணேஷ், பி.டெக்.,பி.எல்.,**
நீதித்துறை நடுவர் (FAC), குடியாத்தம்.

2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17ஆம் நாள் திங்கள்கிழமை

## ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 342/2023
## (C.N.R. No.TNVL11-004347-2022)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | மாநில அரசு, காவல் உதவி ஆய்வாளர் மூலமாக பேர்ணாம்பட்டு காவல் நிலையம், குற்ற எண். 116/2018 |
| குற்றம்சாட்டப்பட்டவர்கள் | – | 1) பிரபு, வயது 27, த/பெ.கண்ணியப்பன்,<br>2) கார்த்தி (எ) வேதநாயகம், வயது 35, த/பெ.ஜெகன்நாதன்<br>3) பூபாலன், வயது 27, த/பெ.தேவராஜ்<br>4) சுரேஷ், வயது 35, த/பெ.மூர்த்தி<br>5) அமிர்தலிங்கம், வயது 40, த/பெ.கந்தசாமி,<br>6) சத்தியா, வயது 24, த/பெ.செல்வம்<br>7) விஜயன், வயது 24, த/பெ.பெருமாள்<br>8) ராம்கி, வயது 23, த/பெ.பெருமாள் |
| வனையப்பட்ட குற்றங்கள் | – | U/s. 147, 148, 294(b), 323, 324, 506(ii) IPC |
| குற்ற நிகழ்வு நாள் | – | 12.03.2018 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 12.03.2018 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | – | A1 to A4, A6, A7, A8 – 19.04.2018 (Anticipatory Bail)<br>A5–12.03.2018 |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | A1 to A4, A6, A7, A8 – 24.04.2018<br>A5–15.03.2018 |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 06.09.2022 |
| குவிமுச பிரிவு 240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 24.06.2024 |
| சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | – | |

| சாட்சிகள் | முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|
| அ.சா.1 | 06.02.2025 | -- |
| அ.சா.2 | 06.02.2025 | -- |
| அ.சா.3 | 06.02.2025 | -- |

| | | |
|---|---|---|
| | | அ.சா.4 \| 10.02.2025 \| 10.02.2025 |
| குவிமுச பிரிவு 311–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | – | –– |
| குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 13.02.2025 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | – | –––– |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | இல்லை |
| தீர்மானம் | – | எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லையென தீர்மானிக்கப்படுகிறது. |

இவ்வழக்கு 06.09.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் திரு.V.ரஞ்சித்குமார்,B.A.,B.L.,MBA., அவர்கள் முன்னிலையாகியும் இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக 17.02.2025 ஆம் தேதி என் முன்பாக விசாரணைக்கு வந்ததில், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1. அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 11.03.2018ஆம் தேதி இரவு லண்டன்பட்டியை சேர்ந்த பிரபு என்பவர் இருசக்கர வாகனத்தில் தெருவில் வேகமாக ஓட்டி சென்றதாகவும், அதனை வாதி சையத் ஜாபர், த/பெ.சையத் அல்லாபஷ் என்பவரும் மற்றவர்களும் சேர்ந்து ஏம்பா இவ்வளவு வேகமாக ஓட்டுற என கேட்டு ஒருவருக்கொருவர் வாய்தகராறு ஏற்பட்டதாகவும், பிறகு சமாதானமாக சென்றுவிட்டதாகவும், இந்நிலையில் 12.03.2018 ஆம் தேதி காலை S.K.காதர்,

த/பெ.சாதிக் என்பவர் மொரசப்பல்லி மெயின்ரோட்டில் உள்ள விநாயகம் ஓட்டலில் வேலை செய்ய சென்றபோது லண்டன்பட்டி மற்றும் ஊசூரான்பட்டியை சேர்ந்தவர்கள் அடித்துவிட்டதாகவும், பிறகு காலை 10.00 மணிக்கு மொரசப்பல்லி பஸ் நிறுத்தத்திடம் வாதியும் மற்றும் இம்ரான், சாதிக், சபீர், தன்வீர், சையத் நூர், அப்துல் ரசாக் ஆகியோர்கள் இருந்தபோது லண்டன்பட்டியை சேர்ந்த 1ஆம் எதிரி பிரதாப், 2ஆம் எதிரி கார்த்தி (எ) வேதநாயகம் மற்றும் ஊசூரான்பட்டியை சேர்ந்த 3 முதல் 8 எதிரிகளான பூபாலன், சுரேஷ், அமிர்தலிங்கம், சத்தியா, விஜியன், ராம்கி ஆகியோர்கள் கும்பலாக ஒன்று சேர்ந்தும், கும்பலாக கையில் கொம்பு மற்றும் கல் ஆகிய ஆயுதங்களுடன் வந்தும், அதன் தொடர்ச்சியாக 1ஆம் எதிரி பிரபு ஏண்டா தெவிடியா பசங்களே என்று அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த கொம்பால் வாதியின் இடதுபக்க கன்னம், கழுத்து, கால்முட்டி ஆகிய இடங்களில் அடித்து ரத்தகாயம் ஏற்படுத்தியும், கொம்பை காட்டி வாதியை பார்த்து எங்களிடம் வைத்துக்கொண்டால் கூண்டோடு ஒழித்துவிடுவோம் என்று மிரட்டினர் என்றும், மேலும் சாதிக் என்பவரை 2ஆம் எதிரி கொம்பை காட்டி நீ என்ன பெரிய மயிறா என திட்டி இடதுகால் முட்டி, இடதுபக்க மார்பு ஆகிய பகுதிகளில் அடித்து காயப்படுத்தியும், 3ஆம் எதிரி கையில் வைத்திருந்த கொம்பால் வாதியின் தம்பி சாதிக் என்பவரை தலையின் பின்பக்கம் மற்றும் இடதுகால் முட்டியில் அடித்தும், இம்ரான் என்பவரை 4ஆம் எதிரி சுரேஷ் தடியால் இடது கை முட்டி, வலது கால் முட்டி ஆகிய இடங்களில் அடித்தும், மேலும்

6, 7 ஆம் எதிரிகள் சேர்ந்து சாதிக், இம்ரான் ஆகியோரை கைகளால் கன்னம், மார்பு, முதுகு ஆகிய இடங்களில் அடித்தும், அதன் தொடர்ச்சியாக 5, 8 மற்றும் 2 எதிரிகள் சேர்ந்து சபீர், தன்வீர், சையத் நூர் மற்றும் அப்துல் ரசாக் இவர்களை கல்லால் சரமாரியாக உடம்பின் மீதும், முதுகின் மீதும், தலையின் மீதும் அடித்ததாகவும், எனவே எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2)–ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பேர்ணாம்பட்டு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னிட்டு இவ்வழக்கானது நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச.207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுக்களின் சாராம்சத்தை விளக்கி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து கூறினார்கள். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

3. அரசுத்தரப்பில் மொத்தம் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள்

குறியிடப்பட்டன. வழக்கு சொத்து சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக அமைந்த சங்கதிகளை கொண்டு குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அத்தகையை சாட்சிய சூழ்நிலைகளை பொய் என மறுத்தார்கள். குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணம் ஏதும் குறியிடப்படவில்லை.

5. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும், தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களில் இருந்தும், இருதரப்பு வாதங்களில் இருந்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இருந்து தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசுத்தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் மீதான குற்றச்சாட்டு தகுநிலை சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

6. இவ்வழக்கின் புகார்தாரரும், வழக்கு சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபருமாக இறுதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள அ.சா.1 ஜாபர் தன்னுடைய சாட்சியத்தில், தான் மொரசபல்லி கிராமத்தில் குடியிருந்து வருவதாகவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அவர்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், சுமார் 7

வருடங்களுக்கு முன்பு தான் ஒரு விபத்து தொடர்பாக பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பேர்ணாம்பட்டு காவல்நிலைய போலிசார் தன்னிடம் ஒரு எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும், இவ்வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் கூறி பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

7. அதுபோலவே வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக இறுதி பட்டியலில் காட்டப்பட்டுள்ள அ.சா.2 சாதிக் மற்றும் அ.சா.3 இம்ரான் ஆகியோர் தங்களது சாட்சியத்தில், தாங்கள் மொரசபள்ளியில் குடியிருந்து வருவதாகவும், இவ்வழக்கு குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள்.

8. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3–ன் சாட்சியமானது எதிரிகளை இவ்வழக்கு சம்பவத்துடன் இணைப்பதாக இல்லை. எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சியத்தின் மூலம் எதிரிகள் குற்றவாளிகள் என்று தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. இவ்வழக்கில் முக்கிய சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3 பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால், பட்டியல் சாட்சிகள் 4 முதல் 8 ஆகியோர் சாட்சியம் அளிப்பதிலிருந்து விலக்கு அளிக்குமாறு அரசு தரப்பில் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று அவர்கள் சாட்சியமளிப்பதிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

10. அ.சா.4 சிலம்பரசன் காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் தற்போது பேர்ணாம்பட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், கடந்த 2018ஆம் வருடம் பேர்ணாம்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.குப்பன் என்பவர் பணிசெய்த விவரம் தனக்கு தெரியும் என்றும், அவர்ருடன் பணியாற்றிய அனுபவம் இருப்பதாலும், அவரது கையொப்பம் தனக்கு பரிட்சயம் என்பதாலும், அவர் தற்போது பணி ஓய்வுபெற்றுவிட்டார் என்பதாலும் அவர் சார்பாக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 12.03.2018 அன்று காலை 12.00 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குப்பன் நிலைய பொறுப்பில் இருந்தபோது பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த சையத் ஜாபர், த/பெ.சையத் அல்லாபக்ஷ் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.116/2018 இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(2) என முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்து அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார் என்றும், அன்றைய தினமே பகல் 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் அஷ்ரப் மற்றும் முகமது ஷெரிப் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார் என்றும், பின்னர் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட சுமார் 3 அடி நீளமுள்ள மர தடி 4 மற்றும் கருங்கல் 3 ஆகியவற்றை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி மேற்படி சாட்சிகளின் கையொப்பங்களை பெற்றார் என்றும், பின்னர் சாட்சிகள் சையத் ஜாபர், காதர் மகன் சாதிக், இம்ரான், சையத் அல்லாபக்ஷ் மகன் சாதிக், அஷ்ரப் மற்றும் முகமது ஷெரிப் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார் என்றும், சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் அன்றைய தினமே மாலை 03.30 மணிக்கு ஊசூரான்பட்டி பஸ் ஸ்டாப்பிடம் இருந்த 5ஆம் எதிரி அமிர்தலிங்கம் என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார் என்றும், மற்ற எதிரிகள் முன்ஜாமீன் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை என்றும்,

வழக்குச் சொத்தான சுமார் 3 அடி நீளமுள்ள மர தடி 4 மற்றும் கருங்கல் 3 ஆகியவற்றை படிவம்–91 மூலம் முறைப்படுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றும், அ.சா.1–க்கு சிகிச்சை அளித்த மருத்துவர்.மின்னரசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை பெற்றார் என்றும், பின்பு அ.சா.2, அ.சா.3 ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்.செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ்களை பெற்றார் என்றும், பின்னர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரே பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையில் ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சம்பவங்களை விவரிப்பதாக அமைந்துள்ள அ.சா.4–ன் மேற்படி சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதிரிகள் தான் குற்றவாளிகள் என தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. மேலும் இவ்வழக்கில் இரு தரப்பிலும் சமாதானம் ஏற்பட்டுவிட்டதால் அதன் அடிப்படையில் இவ்வழக்கை இரு தரப்பும் சமரசமாக முடித்து கொள்வதாக கு.வி.மு.ச பிரிவு 320–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இவ்வழக்கில் முக்கிய சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

எனவே, இரு தரப்பும் சமாதானம் செய்து கொண்டதால் பிறழ் சாட்சிகள் மீது எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. மேற்கண்ட தீர்ப்பு விவாதத்தின் அடிப்படையில் எதிரிகள் தான் கும்பலாக கையில் ஆயுதங்களுடன் ஒன்று சேர்ந்து, அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, அடித்து, கொலை மிரட்டல் செய்தார்கள் என்று அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. முடிவில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லையென்று முடிவு செய்யப்பட்டுள்ளதால், 1 ஆம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324 மற்றும் 506(2)–ன் படியும், 2 ஆம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324–ன் படியும், 3 முதல் 5, 8 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 148, 324–ன் படியும், மற்றும் 506(2)–ன் படியும், 6 மற்றும் 7ஆம் எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 323–ன் படியான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இந்த தீர்ப்பானது கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் பதிவு செய்யப்படுகிறது. எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

15. இவ்வழக்கில் C.P.No.277/2023–ல் ஆஜர் செய்யப்பட்டுள்ள 3 அடி நீளமுள்ள மர தடி 4 மற்றும் கருங்கல் 3 ஆகியவற்றை

மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/– ஜோ.ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் (FAC),
குடியாத்தம்.

**இணைப்புகள் :–**

1. **அரசுத் தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ஜாபர் |
| அ.சா.2 | திரு. சாதிக் |
| அ.சா.3 | திரு. இம்ரான் |
| அ.சா.4 | திரு. சிலம்பரசன் |

2. **அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.7 | படிவம் 91 |
| அ.சா.ஆ.8 | அ.சா.1–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்றிதழ் |

| | |
|---|---|
| அ.சா.ஆ.9 | அ.சா.2–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்றிதழ் |
| அ.சா.ஆ.10 | அ.சா.3–ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்றிதழ் |

**<u>3. அரசுத் தரப்பு சான்றுபொருள்:</u>** (C.P.No. 277/2023)

| | |
|---|---|
| சா.பொ.1 | 3 அடி நீளமுள்ள மரதடி 4, கருங்கல் 3 |

**4. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருள்கள்** – இல்லை

ஒம்/– ஜோ.ஜெய்கணேஷ்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
குடியாத்தம்.

**<u>குறிப்பு</u>**

1) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.
3) சாட்சிகள் எவரும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**<u>நகல்</u>**

மாண்புமிகு, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், வேலூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.